## இனிமையான குழந்தைகளே! அனைத்து பக்தர்களுக்கும் பக்தியின் பலனான முக்தி, ஜீவன் முக்தியின் அடைக்கலம் கொடுப்பதற்காக தந்தை வந்திருக்கின்றார். நீங்கள் பக்தரிலிருந்து இப்பொழுது வாரிசு (குழந்தைகள்) ஆகியிருக்கிறீர்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் எந்த நினைவில் இருந்தீர்கள் என்றால் உள்ளத்தில் குஷியினுடைய மத்தளம் கொட்டிக்கொண்டே இருப்பீர்கள்?

பதில்: நம்மை விஷ்வத்தின் எஜமானராக, இராஜாக்களுக்கெல்லாம் இராஜா ஆக்குவதற் காக மிகவும் அன்பான பாபா வந்திருக்கின்றார் என்ற நினைவு எப்பொழுதும் இருக்க வேண்டும். நாம் இப்பொழுது சூரியவம்ச இராஜா, இராணி ஆகிக்கொண்டு இருக்கின்றோம். பாபா நம்மை 21 பிறவிகளுக்கு எப்பொழுதும் ஆரோக்கிய மானவராக, செல்வம் நிறைந்தவராக ஆக்கிக் கொண்டு இருக்கின்றார். நம்முடைய சத்யுக இராஜ்யத்தில் அனைத்து பொருட்களும் முதல் தரமானதாக இருக்கும். தத்துவங்கள் கூட சதோபிரதானமாக இருக்கும். ஆத்மா மற்றும் சரீரம் ஆகிய இரண்டும் மலர் போன்றதாக இருக்கும். இந்த நினைவின் மூலம் உள்ளத்தில் குஷியின் மத்தளம் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

ஓம் சாந்தி. தந்தை பரந்தாமத்தில் இருக்கக்கூடியவர் என்பதை குழந்தைகள் அறிந்திருக் கிறீர்கள். இப்பொழுது நீங்கள் பக்தர் கிடையாது என்பதை சுயம் தந்தை குழந்தைகளுக்குக் கூறு கின்றார். இப்பொழுதோ நீங்கள் பகவானுடைய குழந்தைகள் ஆவீர்கள். பக்தர்கள் பகவானைத் தேடிக்கொண்டு இருக்கின்றனர். பக்தரை பகவான் என்று கூறமுடியாது. பக்தர்கள் அனேகர் உள்ளனர், பகவான் ஒருவரே ஆவார். இப்பொழுது பக்தர்கள் மனிதர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவசியம் பகவானும் கூட மனித உருவில் வரவேண்டியதாக இருக்கும். வீட்டில் இருக்கும்பொழுது பகவான் வருகின்றார் என்று மகிமை பாடப்படுகின்றது. யாருடைய வீடு? மனிதர் களுடைய வீடு. பகவான் அவசியம் மனித உருவை தாரணை செய்யவேண்டியதாக உள்ளது. நிராகாரமான பரமபிதா பரமாத்மா ஒருவர் ஆவார், பக்தர்கள் அனேகர் உள்ளனர். அனைத்து மனிதர்களும் இந்த சமயத்தில் பக்தர்கள் ஆவார்கள், பகவானை நினைவு செய் கின்றார்கள். ஏதாவது சமயத்தில் பகவான் அவசியம் வருவார் என்று நினைக்கின்றனர். அவர் சொர்க்கத்தின் படைப்பாளர் ஆவார், எனில், அவசியம் ஒருவர் தான் இருப்பார் அல்லவா! அனேகர் இருக்க முடியாது. பகவான் வந்து மனித உருவில் பக்தர்களுக்குப் புரியவைக்கின்றார். அரைக் கல்பமாக என்னை நினைவு செய்கின்றனர். நாடகத்தின் அனுசாரமாக அவசியம் பக்தி மார்க்கத்தில் நினைவு செய்து தான் ஆகவேண்டும். பிறகு, பகவானாகிய நான் மனித உருவைத் தரித்து பக்தர்களிடம் வருகின்றேன். பக்தர்களும் மனிதர்கள் ஆவர். எனவே, நான் கூட மனிதர்களைத் தான் சந்திக்க வேண்டியதாக உள்ளது. அவசியம் மனித உருவைத் தரிக்க வேண்டியதாக உள்ளது, எந்த கச்ச (ஆமை), மச்ச (மீன்) உருவம் தரிப்பதில்லை. நான் வந்து குழந்தைகளுக்கு என்னுடைய அறிமுகத்தைக் கொடுக்கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். எவரும் என்னுடைய கரை காண முடியாது. ஆகை யினால், நான் வந்திருக்கின்றேன்

என்று நானே வந்து என்னுடைய அறிமுகத்தைக் கொடுக் கின்றேன். தந்தை மனித உடலை எடுத்து வருகின்றார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் எந்த பக்தருடைய உடலில் பிரவேசம் செய்கின்றேன் என்பதையும் கூட புரியவைக்கின்றேன். இவர் (பிரம்மா) அனைவரையும் விட பெரிய பக்தர் ஆவார். ஒருவர் மட்டும் பக்தர் அல்ல. யாரெல்லாம் பழமையான பக்தர்களோ அவர்களுடைய கணக்கைக் கூறுகின்றார். அவர்களே சத்யுகத்தின் ஆதியில் இருந்த தேவி, தேவதை ஆவார்கள். பிறகு, அவர்கள் பக்தி மார்க்கத்தில் வரும்பொழுது பக்தியை ஆரம்பம் செய் கின்றனர். எனவே, அவர்கள் அனைவரையும் விட பழமையான பக்தர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களே முழுமையான பக்தி செய்திருக்கிறார்கள். பகவானை சந்தித்து தேவி, தேவதை பதவியை அடைவதற்காக அவர்களே வந்திருக்கின்றனர். பிறகு வந்து எதிரில் சந்திக்கின்றனர். நாம் பக்தர்களாக இருந்தோம், முழு உலகில் அனைவரும் பக்தர்களாக இருக்கின்றனர் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். பக்தர்களைப் பாதுகாப்பதற்காக பகவான் வந்திருக் கின்றார். ஏனெனில், பக்தர்கள் மிகுந்த துக்கம் நிறைந்தவர்களாக உள்ளனர். சாந்தி மற்றும் சுகம் எங்கே உள்ளது என்பது பக்தர்களுக்குத் தெரியாது. நான் எப்பொழுது வரு கின்றேனோ அப்பொழுது குழந்தைகளுக்காகப் பரிசு எடுத்து வருகின்றேன் என்று பகவான் வந்து புரிய வைக்கின்றார். எல்லையற்ற தந்தை அவசியம் எல்லையற்ற பரிசை எடுத்து வருவார். இப்பொழுது நாம் பக்தர்கள் அல்ல என்பதை நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். பகவான் வந்து தன்னுடைய வாரிசாகத்தான் ஆக்கியிருக் கின்றார். பக்தர்கள் வாரிசு ஆகுவதில்லை. நாம் குழந்தைகள் ஆவோம் என்று அவர்கள் புரிந்துகொள்வதில்லை. தந்தையிடமிருந்து நாம் ஆஸ்தி பெறவேண்டும். அவர்களோ சர்வவியாபி என்று கூறிவிட்டனர், எனில், பகவான் எங்கிருந்து வந்தார்? இப்பொழுது உங்களுக்கு அவசியம் ஆஸ்தி வேண்டும். ஆகையினால், என்னை நினைவு செய்கிறீர்கள். ஆஸ்தி கூட முதல்தரமானதாக இருக்க வேண்டும். இரண்டாம், மூன்றாம் தரமானதாக அல்ல. அனைத்து பக்தர்களும் பகவானை சந்திக்க வேண்டும் என்று அவரை நினைவு செய்கின்றனர். ஆனால், எவ்வாறு அவரிடம் செல்வது என்பதை அறிந்திருக்கவில்லை. எனவே, பகவான் வரவேண்டியதாக உள்ளது. கற்பிக்கவும் செய் கின்றார். அனைவருக்கும் பக்தியின் பலன் கொடுப்பதற்காக, அதாவது அனைவரையும் சுகம் நிறைந்தவர்களாக ஆக்குவதற்காக பகவான் வந்திருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். பகவான் இப்பொழுது தான் வரவேண்டியதாக உள்ளது. அவர் ஆன்மிக வழிகாட்டி ஆவார். மனிதர்களுடைய உண்மையிலும் உண்மையான தீர்த்த ஸ்தலம் முக்தி மற்றும் ஜீவன் முக்திதாமம் ஆகும். சொர்க்கத்தில் இருக்கக்கூடிய தேவதைகளின் ஜட சித்திரங்கள் இங்கே உள்ளன. அந்த ஜட சித்திரங்களிடம் யாத்திரையாக செல்கின்றனர். அது உலகாய யாத்திரை ஆகும். தில்வாடா கோவிலுக்கு மற்றும் ஜெகதம்பாவிடம் யாத்திரை செல் கின்றனர், அது பக்தி ஆகும். பகவான் வந்து இந்த யாத்திரையின் ஏமாற்றங்களிலிருந்து விடுவிக்கின்றார். பக்தர்கள் பகவானை சந்திக்கும்பொழுது பகவான் பக்தியினுடைய துக்கங் களிலிருந்து விடுவித்து புகலிடம் அளிக்கின்றார். அனைத்து தர்மத்தைச் சேர்ந்தவர்கள் யாரெல்லாம் இருக்கின்றனரோ, அந்த அனைத்து மனிதர்களுக்கும் இப்பொழுது புகலிடம் கொடுப்பதற்காக வந்திருக்கின்றேன் என்று தந்தை கூறுகின்றார். உண்மையான புகலிடம் முக்தி, ஜீவன் முக்திதாமம் ஆகும். அனைவரையும் தன்னுடைய தாமம் (இருப்பிடம்) மற்றும் சொர்க்க தாமத்திற்கு அழைத்துச்

செல்கின்றார். பாபா பரந்தாமத்திலிருந்து வந்திருக்கின்றார் என்பது குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில் உள்ளது. நாம் பகவானிடம் செல்ல வேண்டும் என்று ஆத்மா தான் விரும்புகிறது. நினைவு செய்வது யார்? இந்த உறுப்புகள் மூலம் ஆத்மா நினைவு செய்கிறது. இப்பொழுது நீங்கள் ஆத்ம அபிமானி ஆகவேண்டும் என்று தந்தை கூறுகின்றார். உங்களுடைய புத்தியில் ஞான அலை அடித்துக்கொண்டிருக்கிறது. நாடகத்தின் அனுசாரமாக பாபா வந்திருக் கின்றார். குழந்தைகளை இராவணனுடைய துக்கத் திலிருந்து விடுவித்து தன்னுடன் அழைத்துச் செல்வார். வழிகாட்டியாகி வந்திருக்கின்றார். நீங்கள் தீர்த்த யாத்திரையாக எங்கே செல்ல வேண்டுமோ, அங்கிருந்து பிறகு திரும்ப வரக் கூடாது. இங்கே நடப்பதோ அல்ப காலத்திற்கான உலகாய தீர்த்த யாத்திரையாகும். இந்த ஜட தீர்த்த யாத்திரை முடிவடைந்துவிடும். பிறகு, நீங்கள் மற்ற அனைத்து தீர்த்த ஸ்தலங்களுக்குச் செல்கிறீர்கள். உண்மையான தீர்த்த ஸ்தலம் ஒன்று முக்திதாமம், மற்றொன்று ஜீவன் முக்திதாமம் ஆகும். அந்த அனைத்து தீர்த்த ஸ்தலங்களுக்கும் செல்வதற்காக பக்தர்கள் உலகாய யாத்திரை செய்துகொண்டு இருக் கின்றனர். உலகாய யாத்திரை ஜென்ம ஜென்மங் களாக செய்தபிறகு அதிலிருந்து விடுபட்டு நாம் ஆன்மிக தீர்த்த யாத்திரைக்குச் செல்வோம், பிறகு, இங்கே மரணலோகத்திற்கு வரவே மாட்டோம். முக்திதாமத்திற்குச் சென்றுவிடுவோம். வருவதும் போவதும் நின்றுவிடும். பிறகு, சொர்க்கத்திற்குச் செல்வோம், அங்கே வருவதும் போவதும் இருக்கும். சொர்க்கவாசி ஆகிவிடு வோம். பாபா நம்மை சொர்க்கவாசி ஆக்கிக் கொண்டு இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். சொர்க்கத்திற்கு செல்வதற்கு நாம் ஏற்பாடு செய்கின்றோம். உலகத்தில் எவருக்கும் தெரியவே தெரியாது, முற்றிலும் புத்தியற்றவர்களாக உள்ளனர். சாஸ்திரம் போன்றவற்றைப் படிப்பதனால் கூட எந்த இலாபமும் இல்லை. தற்போதைய ஞானத்துடன் ஒப்பிடும்பொழுது அவ்வாறு தான் கூறலாம். அல்ப கால சுகத்தை கொஞ்ச சுகம் என்று சொல்லலாம். அதிகமான இனிப்பு மற்றும் குறைவான இனிப்பிற்கும் வித்தியாசம் உள்ளது அல்லவா!

நாம் சூரியவம்சி இராஜா, இராணி ஆகின்றோம் என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்திருக் கிறீர்கள். மிகுந்த செல்வந்தன் ஆகவேண்டும் என்று அவர்கள் ஆசை வைக்கின்றனர். செல்வமோ அவசியம் வேண்டும், அப்பொழுதே சுகம் இருக்கும். செல்வத்தின் கூடவே ஆரோக்கியமும் இருக்க வேண்டும். ஆரோக்கியம், செல்வம் இருக்கிறது என்றால் மிகுந்த சுகம் இருக்கும். இந்த உலகத்தில் ஆரோக்கியம், செல்வம் ஆகிய இரண்டுமே கிடைக்க முடியாது. ஒரு பிறவியில் ஒரு மனிதரிடம் இவை இரண்டும் இருக்க முடியாது. அங்கேயோ நீங்கள் அனைவரும் 21 பிறவிகளுக்கு ஆரோக்கியமாக, செல்வம் நிறைந்தவர்களாக இருக் கிறீர்கள். அங்கேயோ அனாதி, ஆதியில் ஒவ்வொரு பொருளும் மிகவும் மலிவாக இருக்கும். பணத்திற் கான அவசியமே இருக்காது. பணத்திற்கு பதிலாக தங்க நாணயம் கொடுத்திருப்பார்கள் மற்றும் பொருள் முதல் தரமானதாக இருக்கும். தத்துவங்களும் கூட சதோபிரதானம் ஆகிவிடுகின்றன. எனவே, அவற்றிலிருந்து பொருட்களும் மிக நன்றாக உருவாகியிருக்கும். உணவு உட்கொள்ளும்பொழுது எவ்வளவு மஜா ஏற்படும். இப்பொழுது உங்களுடைய உள்ளத்தில் மத்தளம் கொட்டவேண்டும். மிகவும் அன்பான தந்தை வந்திருக்கின்றார். நான் உங்களுடைய மிக அன்பான தந்தை ஆவேன் என்று கூறுகின்றார். 63 பிறவிகளாக நீங்கள் நினைவு செய்திருக் கிறீர்கள். அவசியம்

அன்பானவராக இருப்பதனாலேயே நினைவு செய்கிறீர்கள் அல்லவா! மனிதர்களுக்கோ எதுவும் தெரியாது. பாபா நம்மை இராஜாக்களுக்கெல்லாம் இராஜா வாக, சொர்க்கத்தின் எஜமானராக, விஷ்வத்தின் மாலிக்காக ஆக்குகின்றார். தேவி, தேவதை கள் விஷ்வத்தின் எஜமானர்கள் ஆவார்கள் அல்லவா! ஆனால், அவர்கள் மீதும் கூட அவர்களுடைய சிறு வயதில் இருந்தே பொய்யான களங்கத்தை ஏற்படுத்திவிட்டார்கள். எவ்வளவு பொய்யான விசயங்களை எழுதிவிட்டார்கள்! மாயை முற்றிலும் 100 சதவிகிதம் நான்சென்ஸ் (அபத்தமான) புத்தி ஆக்கிவிட்டது. இது கூட நாடகத்தின் விளையாட்டு ஆகும். என்னை முழுமையாக நினைவு செய்தீர்கள் என்றால் உங்களுடைய அனைத்து விகர்மங்களும் விநாசம் ஆகிவிடும் என்று இப்பொழுது மிகவும் அன்பான தந்தை கூறுகின்றார். மலர் போன்றவர் ஆகுங்கள். ஆத்மா மலர் போன்றதாக இருந்தால் சரீரம் கூட அவ்வாறு நன்றாக கிடைக்கும். தாயும் நீயே, தந்தை யும் நீயே இது யாருடைய மகிமை? நாய், பூனை ஆகிய அனைத்திலும் ஈஸ்வரன் இருக்கின்றார் என்றால் அவற்றை தாய் தந்தை என்று கூற முடியுமா என்ன? மனிதர்களுடைய புத்தி என்ன ஆகிவிட்டது! எவ்வளவு பகட்டைக் காண்பிக்கின்றனர்? இதை மாயையின் பகட்டு என்று கூறப்படுகின்றது. மாயையின் இராஜ்யத்தில் மனிதர்களுக்கு போதை எவ்வளவு உள்ளது! ஆனால் எதையுமே அறிந்திருக்கவில்லை. உங்களில் கூட யார் நன்றாக ஞானத்தை தாரணை செய்யக்கூடியவர்களோ, அவர்களுக்கு போதை அதிகமாக இருக்கும். ஞானத்தின் தாரணை இல்லை என்றால் தோற்றமோ மனிதரு டையதாக இருக்கும், ஆனால் முகம் குரங்கு போல் இருக்கும். நாம் ஸ்ரீமத்படி நடந்து பாரதத்தின் மனிதர்களை சிரேஷ்டமான தெய்வீக குணங்கள் நிறைந்தவர்களாக ஆக்கு கின்றோம் அதாவது நாம் பாரதத்தை சிரேஷ்டமான தெய்வீக இராஜ்ய ஸ்தானமாக ஆக்கு கின்றோம் என்பதை இப்பொழுது குழந்தை களாகிய நீங்கள் புரிந்திருக் கிறீர்கள். யாருக்கு இந்த போதை இருக்குமோ அவர்களே இவ்வாறு பேசுவார்கள். எங்கெல்லாம் சொற்பொழிவு ஆற்றுவீர்களோ, அங்கே நாங்கள் ஸ்ரீ அதாவது சிரேஷ்டமான வழிப்படி நடந்துகொண்டு இருக்கின்றோம் என்று சொல்லுங்கள். பகவான் ஞானக் கடல், ஆனந்தக் கடல் ஆவார், நாங்கள் அவருடைய வழிப்படி நடந்துகொண்டிருக்கின்றோம். யாதவர்கள் மற்றும் கௌரவர்கள் ஆகிய இருவரும் இராவணனுடைய வழிப்படி நடக்கின்றனர், மேலும், பாண்டவர் களாகிய நாம் பகவானுடைய ஸ்ரீமத்படி நடக்கின்றோம். வெற்றி கூட நமக்கே கிடைக்கிறது. கிருஷ்ணர் ஒன்றும் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யவில்லை. பகவான் தந்தை தான் ஸ்தாபனை செய்கின்றார். நாம் பாரதத்தை சிரேஷ்டமாக்குகின்றோம். நாங்கள் ஈஸ்வரிய வழிப்படி நடக்கின்றோம் என்று வேறு எவரும் கூறமுடியாது. ஆம், ஈஸ்வரனுடைய தூண்டு தலால் செய் கின்றோம் என்று அவர்கள் கூறுவார்கள். தந்தையோ, நான் இந்த உடலில் வந்து வழி கொடுக்கின்றேன் என்று கூறுகின்றார். இதில் தூண்டுதலுக்கான விசயமே கிடையாது. எனவே, முதன் முதலில் நிராகாரமானவரின் மகிமை செய்ய வேண்டும். அவர் மனித சிருஷ்டியின் விதை ரூபம் ஆவார், ஞானக் கடல், சுகக் கடல் ஆவார். அவருடைய வழிப்படி நாம் நடக் கின்றோம். அவர் நம்முடைய தந்தை ஆவார். பரந்தாமத்தில் இருக்கக்கூடியவர். சொர்க்கத்தின் படைப்பாளர். யார் அவரைப் பற்றி அறிந்திருப்பார்களோ, அவர்களே மகிமை செய்வார்கள். முழு சிருஷ்டியையும் பாவனம் ஆக்கக்கூடியவர் ஒருவர் தான் இருந்திட வேண்டும்.அனேகர் இருக்கமுடியாது. எனவே, நம்மைத் தவிர மற்ற

அனைவரும் இராவணனுடைய வழிப்படி நடக்கின்றனர். நாம் ஸ்ரீமத்படி பாரதத்தை மீண்டும் தெய்வீக இராஜ்ய ஸ்தானமாக ஆக்கிக் கொண்டு இருக்கின்றோம். இந்த அனேக தர்மங்களும் விநாசம் ஆக வேண்டும். பி.கு. நாம் யாரெல்லாம் இருக்கிறோமோ, நாம் அனைவரும் இதை நடை முறையில் அனுபவம் செய்திருக்கிறோம். நாம் பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் ஆவோம். நீங்களும் தான் (பிரம்மாவின் குழந்தைகள்), ஆனால், நாங்கள் நடைமுறையில் இப்பொழுது இருக்கின்றோம். பரமபிதா பரமாத்மா பிரம்மா மூலம் மனித சிருஷ்டியைப் படைத்தார் என்று பிறகு பக்தி மார்க்கத்தில் மகிமை செய்யப்படும். உடனடியாக தேவதை ஆகிவிட்டனர் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால், கிடையாது. பிரம்மா மூலம் முதலில் பிராமணர்களைப் படைக்கின்றார், பிறகு, குலங்களில் வரவேண்டும். கதைகளைச் சொல்வதாலோ அல்லது நாடகம் போன்ற வற்றாலோ எந்த இலாபமும் இல்லை. நேரடியாக தந்தையின் போதனைகளை சொல்ல வேண்டும். தந்தை நமக்கு என்ன சொல்கின்றார்? ஹே, இனிமையான குழந்தைகளே! ஹே, ஆத்மாக்களே.... தேவதை ஆகுவதற்காக நாங்கள் ஸ்ரீமத்படி நடந்துகொண்டு இருக் கின்றோம் என்று முழு சபையில் சொல்ல வேண்டும். அவர் நமக்கு இராஜயோகத்தைக் கற்பிக் கின்றார். கீதையின் பகவானும் அந்த நிராகாரமானவரே ஆவார். சாகாரத்தில் வருகின்றார், பிரஜாபிதா பிரம்மாவின் வாய் மூலம் இந்த பிராமண பிராமணிகள் உருவாகின்றனர். நாம் பி.கு ஆவோம். பரமபிதா பரமாத்மா நம்மை பிரம்மாவின் வாய் மூலம் படைத்திருக்கின்றார். நாம் சிவபாபா வினுடைய பேரக் குழந்தைகள் ஆவோம். பி.கு.வினுடைய அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும் கூட சிவனுடைய பேரக் குழந்தைகள், பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் ஆவீர்கள். இப்பொழுது மீண்டும் இந்த புதிய படைப்பு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. இவ்வாறு புரியவைக்க வேண்டும். நாமும் சிவனுடைய பேரக் குழந்தைகள், பிரம்மாவின் குழந்தைகள் என்று அவர்களும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் அவருடையவர் ஆகியிருக்கின்றோம். ஆகை யினால், நம்முடைய பெயர் பிரம்மாகுமார் பிரம்மாகுமாரிகள் என்பதாகும். கல்பத்திற்கு முன்பு இந்த பிராமணரிலிருந்து தேவதை, பிறகு, சத்திரியர், வைஷ்யர், சூத்திரர் ஆகியிருந்தோம். இப்பொழுது மீண்டும் பிராமணர் ஆகியிருக் கின்றோம். இவ்வாறு நல்ல முறையில் சக்கரத்தைப் பற்றிய இரகசியத்தைப் புத்தியில் பதிய வைக்க வேண்டும். முதலில் தந்தையின் முழுமையான அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். தந்தை எங்களுக்கு சொல்லியிருக்கின்றார், பிறகு நாங்கள் உங்களுக்கு சொல்கின்றோம். இந்த நாடகச் சக்கரம் எவ்வாறு சுழல்கிறது? சக்கரவர்த்தி இராஜா எவ்வாறு ஆகவேண்டும்? இதுவே ஞானம் ஆகும். இதில் எந்த ஆயுதங்களின் அவசியம் இல்லை. உலகத்தின் வரலாறு, பூகோளத்தை அவசியம் மனிதர்களே அறிந்துகொள்வார்கள் அல்லவா! மனித சிருஷ்டி சக்கரம் எவ்வாறு சுழல்கிறது என்பதை அவசியம் அறிந்திருக்க வேண்டும். நாங்கள் தந்தை மூலம் கேட்கின்றோம், எனவே, சக்கரவர்த்தி இராஜா ஆகின்றோம். நீங்களும் கூட எல்லையற்ற தந்தையிடமிருந்து சுகத்தைப் பெற வேண்டும் என்றால் முயற்சி செய்யுங்கள். எல்லையற்ற தந்தையே சொர்க்கத்தின் படைப்பாளர் ஆவார். அவரிடமிருந்து எல்லையற்ற சுகம் கிடைக் கிறது எனில், ஏன் எல்லையற்ற தந்தையை நினைவு செய்யக்கூடாது? லௌகீக தந்தை யினுடைய ஆஸ்தியினால் மகிழ்ச்சி அடைவதில்லை. நாங்கள் எல்லையற்ற தந்தையிட மிருந்து 21 பிறவிகளுக்கு சுகத்தை அடைகின்றோம். மற்ற

அனைத்தும் பக்தி மார்க்கத்தின் சாதனங்கள் ஆகும். சாஸ்திரங்கள் ஆதி, அனாதியானது என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், இவை அனைத்தும் இருந்த போதிலும் இப்பொழுது கலியுகம் வந்திருக்கிறது. உலகம் பதீதம் ஆகிக் கொண்டே இருக்கிறது. பலன் எதுவுமே இல்லை. இப்பொழுது தந்தை சுயம் வந்திருக் கின்றார், நாங்கள் அவருடைய பேரக் குழந்தைகள், பிரம்மாவின் குழந்தைகள் பிராமணர்கள் ஆவோம். உண்மையில் அவர் உங்களுக்கும் தந்தை ஆவார். இவ்வாறு நல்ல முறையில் புரிய வைத்தீர்கள் என்றால் அவர்களும் கூட உருகிவிடுவார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகு காலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தை பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்காக முக்கியமான சாரம்:

1. ஆன்மிக யாத்திரையில் முனைப்பாக இருந்து நினைவின் மூலம் ஆத்மா மற்றும் சரீரம் ஆகிய இரண்டையும் மலருக்கு சமமாக ஆக்கவேண்டும். விகர்மங்களை விநாசம் செய்யவேண்டும்.

2. நாம் நேரடியாக ஈஸ்வரனுடைய வழிப்படி பாரதத்தை சிரேஷ்டமாக, மனிதர்களை தெய்வீக குணங்கள் நிறைந்தவர்களாக ஆக்குவதற்கான சேவைக்கு நிமித்தமானவர்கள் ஆவோம் என்ற இந்த நினைவில் இருக்க வேண்டும்.

வரதானம் : சூரிய காந்தி மலரை போல ஞான சூரியனின் பிரகாசத்தில் ஜொலிக்கக் கூடிய எப்பொழுதும் எதிரிலும் அருகிலும் இருக்கக் கூடியவர்கள் ஆவீர்களாக.

எப்படி சூரிய காந்தி மலர் எப்பொழுதும் சூரியனின் பிரகாசத்தால் சூழப்பட்டதாக இருக்கிறது. அதனுடைய முகம் சூரியன் பக்கம் இருக்கும். இதழ்கள் சூரியனின் கிரணங் களை போல சர்க் கிள் - வட்ட வடிவத்தில் இருக்கும். அதே போல எந்த குழந்தைகள் எப்பொழுதும் ஞான சூரியனுக்கு அருகிலும் மற்றும் எதிரிலும் இருக்கிறார்களோ, ஒரு பொழுதும் தூரத்தில் இருப்ப தில்லையோ, அவர்கள் சூரியகாந்தி மலரை போல ஞான சூரியனின் பிரகாசத்தால் சுயம் தாங்களும் பிரகாசமாக இருப்பார்கள். மேலும் மற்றவர்களையும் பிரகாசிக்கு மாறு செய்வார்கள்.

சுலோகன்: எப்பொழுதும் தைரியசாலியாக இருங்கள் மற்றும் அனைவருக்கும் தைரிய மூட்டுங்கள். அப்பொழுது பரமாத்மா உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும்.